# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



(60) 59

பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்பு துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ப.ரங்கநாதன்,B.E.,M.Tech(IITD),AITP.,<br>இணை இயக்குநர் / உதவி இயக்குநர்(பொ),<br>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,<br>எண்.14/ஜி,முதல் மாடி, M.B.T ரோடு,,<br>நவல்பூர், ராணிப்பேட்டை – 632 402<br>மின்அஞ்சல்:dtcp.ranipettai@gmail.com<br>தொலைபேசி: 04172-290719 | தலைவர்,<br>தணிகைபோளுர் ஊராட்சி மன்றம்,<br>தணிகைபோளுர்,<br>ராணிப்பேட்டை மாவட்டம். |

ந.க.எண்:1385/2020/ராமா நாள்:26.10.2021

அய்யா,

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ராணிப்பேட்டை மாவட்டம் - அரக்கோணம் வட்டம்/ஊராட்சி ஒன்றியம் - தணிகைபோளுர் ஊராட்சி /கிராமம் ச.எண்கள் - 92/1A2, 6,7– ல் 0.87 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை:

01. மனுதாரர் திரு.K.பிரபாகரன் அவர்களின் கடிதம் நாள்.23.12.2020, 07.01.2021,27.02.2021 (ம) 20.07.2021 மற்றும் Online Application No.202005201016910 Date:29.08.2020
02. இவ்லுவலக கடிதம் இதே எண். நாள்: 23.03.2021 (சாலை (ம) பொது ஒதுக்கீடு ஒப்புதலளிக்கப்பட்டது)
03. மனுதாரர் கடிதம் நாள்:19.07.2021 (ஆவணம் எண்.2563/2021 நாள்:15.07.2021 பெறப்பட்டது )
04. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ நாள்:24.12.2020
05. அரசாணை எண்:138, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை நாள்:04.06.2004.
06. அரசாணை எண்:79, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை நாள்:04.05.2017.
07. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
08. அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை (UD4(3) நாள்:04.05.2017.
09. அரசாணை எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD4(1) நாள்:09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017.
12. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:19.08.2021 (நன்னிலை வரி (ம) Display Board கட்டணம் கோரப்பட்டது).
13. மனுதாரர் கடிதம் நாள் 14.09.2021 (கட்டணம் செலுத்தப்பட்டு கடிதம் பெறப்பட்டது)
14. வேளாண்மை இணை இயக்குநர்(பொ), ராணிப்பேட்டை அவர்களின் கடிதம் எண்.ஆ2/2238/2020 நாள்.12.12.2020

*****

60



பார்வை 1-ல் சுட்டிய கடிதத்தில் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், தணிகைபோளூர் ஊராட்சி /கிராமம் ச.எண்கள் - 92/1A2, 6,7– ல் 0.87 ஏக்கர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலக கடிதம் நாள்: 23.03.2021 மூலம் மனைப்பிரிவு சாலை (ம) பூங்கா அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு தானமாக தானப்பத்திர ஆவணம் எண்.2563/2021 நாள்:15.07.2021 –ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ.(ராமா) எண்.**85/2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மபந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

1. (a). பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் " Collection the necessary fees including the charges for providing amenities like roads, storms water drains and street lights form the applicant" After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b). மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads. Provide othher amenitites like storm water drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the strands specified by the Local Body"
2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு EWS மேலாகியும் மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. " The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016) The Promoter has to advertise, market book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority –ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-யையும் மற்றும் விதி எண்.9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
தலைப்புக்கணக்கு:
0217 Urban Development - 60 Other Urban Development Schemes - 800 Other Receipts - AS Receipts Under Land use conversion charges-27 Non Taxation fees - 09 Collections.
DPC: 0217 60 800 AS 2790
6. பார்வை 5 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் படி மனைகளுக்கான நன்னிலைவரி ரூ.7800/- (ரூபாய் ஏழாயிரத்து எண்ணூறு மட்டும்) Display Board கட்டணம் ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கொடி நாள் கட்டணம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) பெறப்பட்டுள்ளது.

தலைவர், தணிகைபோளுர் ஊராட்சி மன்றம், தணிகைபோளுர் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்று உடன் அனுப்பி வைக்குமாறு தலைவர், தணிகைபோளுர் ஊராட்சி மன்றம், தணிகைபோளுர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், மனுதாரர் மேற்கண்ட உத்தரவு பெற தலைவர், தணிகைபோளுர் ஊராட்சி மன்றம், தணிகைபோளுர் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(5 தொகுப்பு மற்றும் அசல் தான பத்திரம்)

26/10/2021

இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

நகல்:
1. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)
CMDA வளாகம், கோயம்பேடு, சென்னை
2. திரு.K.பிரபாகரன்,
எண்-24/54, இரயில்வே போலீஸ் லைன் தெரு,
அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.
3. இருப்பு கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)
4. கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)
5. Real Estate Regulatory Authority (RERA)
No.1, Gandhi – Irvin Road,
CMDA Building, Egmore, Chennai.

26/10/2021 26/10/2021

63

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை
ராணிப்பேட்டை மாவட்டம்.

கோப்பு எண்:1385/2020-ராமா
ச.எண்கள் - 92/1A2, 6,7

நாள்:26.10.2021

தணிகைபோளூர் ஊராட்சி மன்றம்,
தணிகைபோளூர்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

மனைப்பிரிவு:ம.வ / மா.ந.ஊ.உ..இ(ரா.மா.) எண்:**85 /2021**

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலை முடுக்கு பகுதி அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகளை தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனுதாரர், மனைப்பிரிவுத் தொடர்புடைய தலைவர், தணிகைபோளூர் ஊராட்சி மன்றம், தணிகைபோளூர் அவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
9. அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Plannnig Permission / Concurrence ) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.
   ஆ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

64



10. மனுதாரர் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Plannnig Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Plannnig Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விவரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 37897.20 ச.அடி (அ) 3520.74 ச.மீ (அ) 0.87 ஏக்கர் |
| ஒதுக்கிய மனைகள் | : | 24 |
| கடை | : | 897.0 ச.அடி -2.36% |
| பொது உபயோகம் (PP) மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது | : | 380.00 ச.அடி 1.33% |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | : | 9393.00 ச.அடி |
| 3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்பகிர்மான கழகத்திற்கானது | : | 379.00 ச.அடி – 1.33 % |

26/10/2021

இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

26/10/2021 26/10/2021

தணிகைபோளூர் ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு. A.வெங்கடேசன்

க.எண்.02/2022–2023 நாள் 15.07.2022

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – ராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம் வட்டம், தணிகைபோளூர் ஊராட்சி/கிராமம் ச.எண்கள் 92/1A2, 92/6, 7–ல் 0.87 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அங்கீகாரம் தொகை பெறப்பட்டு ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – சார்பு.

பார்வை : 1. துணை இயக்குநர்/உதவி இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 1385/2020 (ராமா) மனைப்பிரிவு: ம.வ/மா.ந.ஊ.இ(ராமா) எண்.85/2020–21 நாள் : 26.10.2021.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020 போ நாள் : 24.12.2020
3. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை 04.06.2004
4. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை 04.05.2017.
5. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 31.01.2020.
6. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை UD4(3) நாள் : ~~23.09.2020~~ 04.05.2017
7. அரசாணை எண். 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD4(1) நாள் : 09.12.2020
8. அரசு கடித எண்.19113 நவ4(3)2017–1 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் : 30.08.2017.
9. ஊராட்சிமன்றத் தீர்மான எண்.27 நாள் : 30.04.2022.

—

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தணிகைபோளூர் ஊராட்சியில் கிராம சர்வே எண்கள் 92/1A2, 92/6, 7–ல் 0.87 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் கண்டுள்ள அரசாணையின்படி விதி எண்.3 படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/– வீதம் 24 மனைகளுக்கு ரூ.1000x24=24,000 இத்தொகையை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டது. ஒரு ஏக்கருக்கு ரூ.1000/– வீதம் 0.87 சென்ட்டுக்கு உரிய தொகை ரூ.1000/– செலுத்தப்பட்டது.

மேற்படி இடத்தின் விதி எண்.3 படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% சதவீதம் தொகையை நிலப்பயன் மாற்றுக் கட்டணமாக ஊராட்சிக்கு செலுத்த வேண்டும் என பார்வை 1ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 3, 4 காணும் அரசாணைகளின்படி கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து உரிய தலைப்புகளில் செலுத்த மனை உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

| வ. எண் | ச.எண் | விவரம் | தொகை | 3% சதவீதம் | செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 92/1A2 | 0.21 சென்ட் | 21x3448=72408 | 72408x3%=2172 | 2172/- |
| 2 | 92/6 | 0.36 சென்ட் | 36x3448=124128 | 124128x3%=3723 | 3723/- |
| 3 | 92/7 | 0.30 சென்ட் | 30x3448=103464 | 103464x3%=3105 | 3105/- |
| | | 0.87 ஏக்கர்ஸ் | | மொத்தம் | 9000/- |

கலம் எண்.6ல் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.9000/– (எழுத்தால் ஒன்பதாயிரம் மட்டும்) தணிகைபோளூர் ஊராட்சி நிதிக்கணக்கு எண்.1க்கு தொகை செலான் எண்......63, 64 நாள் : 15.07.2022 மூலமாக தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 9–ல் காணும் தணிகைபோளூர் ஊராட்சிமன்ற தீர்மான எண்.27 நாள் :30.04.2022.. (அங்கீகரிக்கப்பட்டது) பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வூராட்சியின் அனுமதியின்றி எவ்வித மாற்றம் செய்யக் கூடாது. மாற்றம் செய்யப்படின் இவ்வுத்தரவு தானாக ரத்து செய்யப்படும் எனவும், மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 0.87 ஏக்கர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைகளுக்கு ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
ஊராட்சி மன்றம்
ஊராட்சிமன்ற தலைவர்,
தணிகைபோளூர்

பெறுநர்

திரு. K.பிரபாகரன்
த/பெ. A.N.குப்புசாமி,
எண்.24/54,
அரக்கோணம் டவுன்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

நகல் பணிவு :

1. துணை இயக்குநர் / உதவி இயக்குநர்
   மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
   நாவல்பூர், ராணிப்பேட்டை.

2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
   ராணிப்பேட்டை

3. 2நீர் இணை சார்பதிவாளர் அலுவலகம்
   அரக்கோணம்.



## our services doesn’t just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate